

சென்னை, நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில், (25.01.2025) அன்று தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி. கணேசன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் ஆகியோர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை சார்பில் நடைபெறும் TNBEAT EXPO 2025' தொழில் முனைவோருக்கான கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் நிகழ்ச்சியை தொடங்கி வைத்து, பள்ளி மாண, மாணவிகளிடையே காணப்படும் ரத்த சோகை நோயை கண்டுபிடிக்கும் புதிய தொழில் நுட்ப நல அட்டையை வெளியிட்டனர். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக்கழக தலைவர் உமதிவாணன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.கிருஷ்ணசாமி, .ஆ.வெங்கடேசன், ஆதிதிரா விடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு செயலாளர் க.லட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் நலத் துறை ஆணையர் த.ஆனந்த், தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி,பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் ச.அண்ணாதுரை. ம.தொ.ப., தூய்மை பணியாளர்கள் நல வாரிய உபதலைவர் திருமதி கனிமொழி பத்மநாபன், செயல் தலைவர் கோவிந்தராஜ், (ஓய்வு) மற்றும் அரசு உயர் அலுவலர்கள், தொழில் முதலீட்டாளர்கள் கலந்து கொண்டனர்.



மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி தலைமையில் (24.1.2025) அன்று எதிர்வரும் கோடை காலத்தில் தமிழ்நாடு முழுவதும் தடையில்லா சீரான மின் விநியோகம் வழங்குவதற்கு தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் சார்பாக மேற்கொள் ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அனைத்து மண்டல தலைமை பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வைப் பொறியாளர்களுடன் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. உடன் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் க.நந்தகுமார், இணை மேலாண்மை இயக்குநர் (நிதி) விஷ மஹாஜன். மின்தொடரமைப்பு கழக மேலாண்மை இயக்குநர் திருமதி கே. இந்திராணி, இயக்குநர் (பகிர்மானம்) அ. ரா. மாஸ்கர்னஸ், மின் பகிரமானக் கழக இயக்குநர் (நிதி) திருமதி. கே. மலர்விழி மற்றும் உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### நிரந்தரத் தீர்வு ஏற்படுத்தும் வகையில்

# திருச்செந்தூர் கடல் அரிப்பினைத் தடுத்திட வல்லுநர்கள் ஆய்வுக் கூட்டம்!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. – அமைச்சர்கள் அனிதா ராதாகிருஷ்ணன் – பி.கே.சேகர்பாபு பங்கேற்பு!

தூத்துக்குடி, ஜன.28-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி ஆகியோர் தலைமையில் (25.01.2025) அன்று இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலகத்தில் திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் கடற்கரை பகுதியில் கடல் அரிப்பினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை சீரமைத்தல் தொடர்பான வல்லுநர்களின் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

**பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-**

திருச்செந்தூரில் ஏற்பட்ட கடல் அரிப்பிற்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் துறை சார்ந்த வல்லுநர்களை அழைத்து ஆய்வு செய்து, மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை துரிதமாக செயல்படுத்திட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார். அதனடிப்படையில் கடந்த 18.01.2025 அன்று மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களும், நானும் திருச்செந்தூருக்கு நேரில் சென்று கடல் அரிப்பினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தபோது, துறை சார்ந்த வல்லுநர்களிடம் நிரந்தர தீர்வு ஏற்படுத்துவது குறித்து அறிக்கை கோரியிருந்தோம்.

அதனைத் தொடர்ந்து, இன்றைய தினம் மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர், மதிப்பிற்குரிய தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோர் தலைமையில் சென்னை இந்திய தொழில்நுட்ப நிறுவனம் (IIT, Madras), கடலோர ஆராய்ச்சிக்கான தேசிய மையம் (NCCR), தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிறுவனம் (NIOT), தமிழ்நாடு மீன்வளத் துறை (TN Fisheries Dept.) மற்றும் நபார்டு (NABARD) ஆகியவற்றை சேர்ந்த பேராசிரியர்கள் மற்றும் வல்லுநர்களின் ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் திருச்செந்தூரில் கடல் அரிப்பை தடுத்திடும் வகையில் நிரந்தர தீர்வு காண மாநில மற்றும் ஒன்றிய அரசின் துறை சார்ந்த பேராசிரியர்கள், அறிவியலாளர்கள் மற்றும் பொறியாளர்களும், ஓய்வுபெற்ற ஐஐடி பேராசிரியர் சுந்தர வடிவேல் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாகவும் ஆலோசனைகளை தெரிவித்ததோடு, அறிக்கைகளையும் அளித்தனர். அதில் 3 குழுவினரின் அறிக்கை ஒரே விதமாகவும், இரண்டு குழுவினரின் அறிக்கை வேறுவிதமாகவும் இருந்தது. இந்த ஐந்து குழுவினருடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அவர்களும், மீன்வளத்துறை ஆணையர் அவர்களும் மீண்டும் கூட்டம் நடத்தி. ஒருங்கிணைந்து நிரந்தர தீர்வு ஏற்படுத்துவதற்கான அறிக்கையினை இரண்டு நாட்களில் இறுதி செய்த பின்னர், அதனை முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று அனுமதி பெற்று, கடல் அரிப்பினை தடுப்பதற்கான பணி களுக்கு ஒப்பந்தம் கோரப்பட்டு, உடனடியாக பணிகள் தொடங்குவதற்குண்டான நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளோம். இது திருச்செந்தூர் திருக்கோயிலுக்கு வருகின்ற பக்தர்கள் கடலில் கால் நனைத்தல் மற்றும் நீராடுதல் போன்ற இறை வழிபாட்டிற்கு உண்டான வழிமுறைகளும் எந்த வகையிலும் பாதிக்கப்படாத அளவிற்கு இருக்கும்.

திருச்செந்தூர் திருக்கோயிலின் பாதுகாப்பு கருதி, 19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணியை மேற்கொள்ள திருக்கோயில் நிதியை மீன்வளத்துறைக்கு டெபாசிட் செய்து, 6 மாதங்களுக்கு முன்பே பணிகள் தொடங்கப்பட்டு அந்த பணியானது 65 சதவீதம் நிறைவு பெற்றுள்ளது. தற்போது கடலரிப்பை தடுக்க தனியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் மீனவர்களுக்கு எந்த வகையிலும் பாதிப்பில்லை. இப்பணிகளில் அனிதா ராதாகிருஷ்ணன் அவர்கள் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையிலும், மீன்வளத் துறை அமைச்சர் என்ற வகையிலும் அதிக கவனம் செலுத்தி வருகின்றார்.

திராவிட மாடல் ஆட்சி ஏற்பட்ட பிறகு திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே வருகிறது. கடந்த ஆட்சியின் பத்து ஆண்டுகளை ஒப்பிட்டு பார்க்கும் போது இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு 100 சதவீதம் திருக்கோயில்களுக்கு பக்தர்களின் வருகை உயர்ந்திருக்கிறது. ஒரு காலத்தில் நாம் தான் அண்டை மாநிலங்களிலுள்ள திருக்கோயில்களுக்கு சென்று நேர்த்திக் கடன் செலுத்தி கொண்டிருந்த நிலை மாறி, இன்றைக்கு தமிழகத்தை நோக்கி அண்டை மாநிலத்த வரும் அதிகளவிற்கு இறைவனை தரிசனம் செய்வதற்கு வருகை தருகின்றார்கள். குறிப்பாக திருச்செந்தூர், பழனி, திருவண்ணாமலை, திருத்தணி ஆகிய திருக்கோயில்களுக்கு ஆந்திரா, தெலுங்கானா, கேரளா மற்றும் கர்நாடகாவிலிருந்து அதிக எண்ணிக்கையில் பக்தர்கள் வருகை தருகின்றனர். இப்படி அதிகரித்து வரும் பக்தர்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றுகின்ற வகையில் பல்வேறு கட்டமைப்புகளையும், வசதிகளையும் உருவாக்கி வருகின்றோம்.

முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு பெருந்திட்ட வரைவின்கீழ் (Master Plan), ரூ.1,770 கோடி மதிப்பீட்டில்19 திருக்கோயில்களில் பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதில் ஒரு பகுதியாக திருச்செந்தூர் திருக்கோயில் பணியும் நடைபெற்று வருவதோடு, அத்திருக்கோயிலுக்கு வருகின்ற ஜூலை 7 அன்று குடமுழுக்கு நடத்திடும் வகையில்9 திட்டமிடலோடு பணியாற்றி வருகிறோம். திருக்கோயில்கள் தொடர்பாக ஏதேனும் குறைபாடுகள் ஊடகங்களில் வெளிவந்தால் முதலமைச்சர் அவர்கள் உடனடியாக அதனை களைவதற்கு தேவையான நடவடிக்கைகளை முழு வீச்சில் எடுத்திட வேண்டுமென தொடர்ந்து அறிவுறுத்தி வருகின்றார். ஆகவே எந்த காலத்திலும் இல்லாத அளவிற்கு திருக்கோயில்களின் மேம்பாட்டிற்கும், பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை உருவாக்கி தருவதற்கும் தொடர்ந்து முழு வேகத்தோடு செயல்படுவோம்.

இந்த ஆட்சியைப் பொறுத்தளவில் எல்லோருக்கும் எல்லாம் என்பதே தாரக மந்திரமாகும். இங்கு ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடே கிடையாது. திருக்கோயில்களில் அனைவருக்கும் கட்டணமில்லா தரிசனம் தான் எங்களின் நோக்கம். திருக்கோயில்களில் இடைத்தரகர்கள் எவரும் அனுமதிக்கப்படுவதில்லை.

கேரள முதலமைச்சர் அவர்களை நானும், துறையின் செயலர் அவர்களும் சென்னை விமான நிலையத்தில் சந்தித்த போது, சபரிமலையில் ரோப் கார் திட்டத்தை செயல்படுத்த உள்ளதாக தெரிவித்தார். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தமிழ்நாட்டிலிருந்து சபரிமலைக்கு செல்லும் ஐயப்ப பக்தர்களுக்கு தங்கும் வசதியை ஏற்படுத்தி தரும் வகையில் இடத்தை ஒதுக்கீடு செய்து தந்திட வேண்டுமென கோரினோம். இது குறித்து முறையாக பரிசீலித்து நடவடிக்கை எடுப்பதாக கேரள முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

அவரவர் விரும்புகின்ற வழிபாட்டில் எந்த விதமான இடையூறும் வரக்கூடாது என்பது முதலமைச்சர் அவர்களின் உத்தரவாகும். இனத்தால், மதத்தால், மொழியால் தமிழகம் பிளவு படக்கூடாது என்பதுதான் திராவிட மாடல் ஆட்சியின் கொள்கையாகும். திருப்பரங்குன்றம் நிகழ்வில் எந்த விதமான சலசலப்பு ஏற்படாமல் இருப்பதற்கு அரசும், துறையும் கவனம் செலுத்திக் கொண்டிருக்கின்றது. ஒரு சில மதவாத சக்திகள் அதை ஊதி பெரிதாக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். மதத்தால், மொழியால், இனத்தால் மக்களை பிளவுபடுத்தாதீர்கள். அனைவரும் ஒன்றாக செல்வோம், ஒன்றாக கைகோர்த்து நிற்போம். எல்லோருக்கும் எல்லாம் என்ற திராவிட மாடல் அரசின் கொள்கையோடு வளர்ச்சி பணிகளை நோக்கி செல்வதற்கு எவ்வித இடையூறுகளையும் ஏற்படுத்தாதீர்கள் என்பதுதான் எனது தாழ்மையான வேண்டுகோளாகும் என்று தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தர மோகன், ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், சென்னை இந்திய தொழில் நுட்ப கழகத்தின் பெருங்கடல் பொறியியல் துறை பேராசிரியர் எஸ்.ஏ.சன்னாசிராஜ், கடலோர ஆராய்ச்சிக்கான தேசிய மையத்தின் இயக்குநரும், அறிவியலாளருமான டாக்டர் எம்.வி.இராமமூர்த்தி மற்றும் அறிவியலாளர் டாக்டர் வி.இராமநாதன், தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிறுவனத்தின் குழுத் தலைவர் மற்றும் அறிவியலாளர் டாக்டர் விஜயா ரவிச்சந்திரன், நபார்டு நிறுவனத்தின் பொறியியல் ஆலோசகர் ஷெல்வின் சௌந்தரராஜன், தலைமைப் பொறியாளர்கள் பொ.பெரியசாமி, திருமதி ஜெயக்குமாரி, இந்து சமய அறநிலையத் துறை மற்றும் மீன்வளத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கோடைக் காலத்தில் தடையில்லா சீரான மின் விநியோகம்!

# தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தின் நடவடிக்கைகள் குறித்து கலந்தாய்வுக் கூட்டம்!

## அமைச்சர் வி.செந்தில்பாலாஜி தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஜன. 28-

மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி தலைமையில் எதிர்வரும் கோடை காலத்தில் தமிழ்நாடு முழுவதும் தடையில்லா சீரான மின் விநியோகம் வழங்குவதற்கு தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் சார்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அனைத்து மண்டல தலைமை பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வைப் பொறியாளர்களுடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி (24.01.2025) அன்று சென்னை, தமிழ்நாடு மின்சார வாரிய தலைமையகத்தில், எதிர்வரும் கோடை காலத்தில் தமிழ்நாடு முழுவதும் சீரான மின் விநியோகம் வழங்குவதற்கு தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் சார்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அனைத்து மண்டல தலைமை பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வைப் பொறியாளர்களுடன் விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின் போது, வடகிழக்கு பருவமழை மற்றும் பெஞ்சல் புயல் காரணமாக, பாதிப்படைந்த சுமார் 12,265 மின் கம்பங்கள், 343 பில்லர் பெட்டிகள், 680.86 கி,மீ மின் கம்பிகள், 485 மின் மாற்றிகள் மற்றும் 16 துணை மின் நிலையங்களை போர்க்கால அடிப்படையில் மின் விநியோக சீரமைப்பு பணிகளை மேற்கொண்டு குறுகிய காலத்தில் பொதுமக்கள் அனைவருக்கும் சீரான மின்சாரம் வழங்கியதற்காக அனைத்து அலுவலர்கள் மற்றும் களப்பணியாளர்களுக்கு மின்சாரத்துறை அமைச்சர் பாராட்டு தெரிவித்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, எதிர்வரும் கோடை காலத்தில் தமிழ்நாடு முழுவதும் தடையில்லா சீரான மின்சாரம் வழங்குவதற்கு மின்கட்டமைப்புகளை வலுப்படுத்துவதற்காக இது வரை 48 துணை மின் நிலையங்கள் புதிதாக நிறுவப்பட்டுள்ளன, 20 புதிய துணை மின் நிலையங்கள் நிறுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், தமிழ்நாடு முழுவதும், இயக்கத்தில் உள்ள 260 திறன் மின் மாற்றிகளின் (Power Transformer) தரம் உயர்த்தப்பட்டுள்ளன, 22 திறன் மின் மாற்றிகளின் தரம் உயர்த்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், அதிகரித்து வரும் மின் தேவையினை கருத்தில் கொண்டு கூடுதலாக அமைக்க வேண்டிய புதிய துணை மின் நிலையங்கள் மற்றும் திறன் மின் மாற்றிகள் குறித்தும், குறிப்பாக, சென்னை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளின் மின் தேவையினை கருத்தில் கொண்டு நிறுவப்பட உள்ள துணை மின் நிலையங்கள் குறித்தும் அறிவுரை வழங்கினார்.

மின் பகிர்மான வட்டம் வாரியாக விரிவான ஆய்வினை மேற்கொண்ட மின்சாரத் துறை அமைச்சர் வட்ட அளவில் அதிக அளவு மின் தடைகள், மின்மாற்றிகள் பழுது மற்றும் மின்னகத்தில் பெறப்பட்ட புகார்கள் கொண்ட மேற்பார்வைப் பொறியாளர்கள் தமது பணிகளில் தனிக்கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தினார்.

சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள புறநகர் பகுதிகளில் இருக்கக்கூடிய துணை மின் நிலையங்கள், மின்மாற்றிகள் மற்றும் பில்லர் பெட்டிகள் ஆகியவற்றில் உரிய முறையில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு தனிக்கவனம் செலுத்தி, தொடர்ச்சியாக மின்தடங்கல் ஏற்படும் இடங்களில் மின்நுகர்வோரி டமிருந்து வரும் புகார்களை குறைப்பதற்கு தக்க நடவடிக்கைகளை எடுக்குமாறு மின்சாரத்துறை அமைச்சர் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி தமிழ்நாட்டு மக்களுக்கு தடையில்லா, சீரான மின்சாரம் வழங்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு அலுவலர்களுக்கு மின்துறை அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தின் போது, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் க.நந்தகுமார், இணை மேலாண்மை இயக்குநர் (நிதி) விஷு மஹாஜன், மின் தொடரமைப்பு கழக மேலாண்மை இயக்குநர் திருமதி கே.இந்திராணி, இயக்குநர் (பகிர்மானம்) அ.ரா. மாஸ்கர்னஸ், மின் பகிர்மானக் கழக இயக்குநர் திருமதி கே.மலர்விழி மற்றும் உயர் அலுவலர்கள், உள்ளிட்ட அனைத்து இயக்குநர்கள், மண்டல தலைமைப் பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வைப் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

மின் சேவைகள் மற்றும் மின் தடை குறித்த புகார்களுக்கு 24 மணி நேரமும் செயல்படும் மின்னகத்தை 94987 94987 தொடர்பு கொள்ளுமாறு பொது மக்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.



புதுக்கோட்டை மாநகராட்சி 9 வது வார்டு வடக்கு 3 ஆம் வீதியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் போடப்பட்ட மினிடேங்கை மாமன்ற உறுப்பினர் திருமதி செந்தாமரை பாலு முன்னிலையில், டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். உடன் வட்டச் செயலாளர் ராமச்சந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் பழனிவேலு, மதியழகன்,பால்ராஜ், மாநகர கழக நிர்வாகிகள் ரெத்தினம், மணிவேலன், சேட் (எ) ஷாஜஹான், அறிவுடைநம்பி மற்றும் அழகு சீனிவாசன், அர்பன் ராஜேந்திரன், பாலு, தினேஷ் உள்ளனர்.

### சென்னை – நந்தம்பாக்கம் ‘வர்த்தக மையத்தில்’

# ஆதிதிராவிடர் - பழங்குடியினர் தொழில் முனைவோருக்கான மாபெரும் கண்காட்சி!

## அமைச்சர் மா.மதிவேந்தன் - தொழில் முனைவோர், வணிகர்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கினார்!

சென்னை, ஜன.28-

சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில் முனைவோருக்கான மாபெரும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கத்தை (TN BEAT EXPO-2025) தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி. கணேசன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் ஆகியோரால் (25.01.2025) அன்று தொடங்கி வைக்கப்பட்ட நிகழ்ச்சியின் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் நடைபெற்ற நிறைவு விழாவில் ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு பங்கேற்ற தொழில் முனைவோர் முதலீட்டாளர்கள், வர்த்தகர்கள் மற்றும் வணிகர்களுக்கு நினைவு பரிசு வழங்கினார்கள்.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலமாக தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழகம் (தாட்கோ) சார்பாக இரண்டாவது முறையாக ஆதிதிரா விடர் மற்றும் பழங்குடியினர் தொழில் முனைவோருக்கான கண்காட்சி கருத்தரங்கம் (TN BEAT EXPO-2025) சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் 25.01.2025 மற்றும் 26.01.2025 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்றது.

இக்கண்காட்சி மற்றும் கருத்தரங்கத்தில் பள்ளி மாணவ / மாணவிகளிடையே காணப்படும் உடல் நலம் குறித்த இரத்த சோகை நோயை கண்டுபிடிக்கும் புதிய தொழில்நுட்ப நலன் அட்டை, லாரி ஓட்டுநரின் வழித்தடங்களில் ஏற்படும் பிரச்சனைகள், கட்டணங்கள் தொடர்பான ஆலோசனைகளை தெரிந்து கொள்ளக்கூடிய தொழில் நுட்பம், AI செயற்கை நுண்ணறிவு ஏற்படுத்தக்கூடிய பிரச்சனைகளை அலசி ஆராயும் தொழில நுட்பம் மற்றும் வேர்வை உணவு பொருட்களான கேரட், நெல்லிக்காய், இட்லிபொடி மற்றும் சத்துபானம் பொருட்கள் போன்ற தொழில் நுட்ப செயலிகள் அறிமுகம் செய்யப்பட்டது. புதிய தொழில் முனைவோர்களை ஊக்கவிக்கவும், அவர்கள் மேம்பாடு அடையும் வகையில் தொழில் நுட்பங்களை எடுத்துரைக்கப்பட்டது.

இக்கண்காட்சியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரால் தயாரிக்கப்பட்ட 15,000-க்கும் மேற்பட்ட பொருட்களும் 500 அரங்கங்களிலும், வணிக நிறுவனங்களால் தயாரிக்கப்பட்ட மோட்டார் வாகன உதிரி பாகங்கள், இரசாயனப் பொருட்கள், மின் மற்றும் மின்னணுவியல், வேளாண்மை கருவிகள், கட்டுமான தொழில் சார்ந்த உபகரணங்கள், தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள் என 300 அரங்குகள், அரசு பொதுத்துறையை சார்ந்த பூம்புகார் நிறுவனம், தமிழ்நாடு மினரல்ஸ் லிமிட்டேட், சிறுதொழில் வளர்ச்சி கழகம், ஆவின், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்கம் நிறுவனம் போன்ற 30 அரங்குகள் மேலும் தேசியமயமாக்கப்பட்ட மற்றும் தனியார் வங்கிகள் மூலம் 15 அரங்குகள் அமைக்கப்பட்டு 35,000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பார்வையிட்டனர்.

மேலும் இரண்டு நாட்கள் நடைபெற்ற இக்கண்காட்சியில் குறு, சிறு தொழில் செய்பவர்கள், சுய உதவி தொழில் செய்பவர்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் தங்களது உற்பத்தி பொருட்களை காட்சிப்படுத்தி வணிகர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு இடையே நேரடி விற்பனையை ஊக்குவித்தனர்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக்கழக தலைவர் உ.மதிவாணன், பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.சரவணக்குமார் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு செயலாளர் திருமதி. க.லட்சுமி பிரியா, தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி, பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் ச.அண்ணாதுரை, ம.தொ.ப. துரய்மைப் பணியாளர்கள் நல வாரிய உபதலைவர் திருமதி கனிமொழி பத்மநாபன், செயல் தலைவர் கோவிந்தராஜ் (ஓய்வு) மற்றும் தொழில் முதலீட்டாளர்கள், அரசு உயர் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க மற்றும் மாணவர் அணி சார்பில் பேராவூரணியில் நடைபெற்ற மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் திராவிட இயக்க எழுத்தாளர் வே.மதிமாறன் மற்றும் தலைமைக் கழக பேச்சாளர் மதுரை சேவியர் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். இக்கூட்டத்தில் நா.அசோக்குமார் எம்.எல்.ஏ, மாநில நிர்வாகிகள் வி.ஜெயபிரகாஷ், கார்த்தியேன் வேலுச்சாமி, மாவட்ட மாணவர் அணி நிர்வாகிகள் ரா.பாலமணிகண்டன், கா.சு. கார்த்திகேயன், அ.கண்ணதாசன், ஜி.வி.விக்னேஷ், த.சுகந்தி, கே.மாணிக்க வாசகம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.